**C.C. No. 136/2024**
**08.01.2026**

**ம.சா.1. மாரியப்பன், த/பெ. பழனியப்பன், காரைக்குடி**

( **சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது**)

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கம்பியூட்டர் சேல்ஸ் அன்ட் சர்வீஸ் கடந்த 13 வருடங்களாக நடத்தி வருகிறேன். கடையின் முகவரி என்னவென்றால் VRP கம்ப்யூட்டர்ஸ். கடைக்கு பங்குதாரர் யாரேனும் உள்ளனரா என்றால் நான் மட்டும் உரிமையாளர். எனது கடைக்கு எங்கு எங்கு வங்கி கணக்கு உள்ளது என்றால் காரைக்குடி காலேஜ் ரோட்டில் உள்ள IOB வங்கியில் மட்டும் கணக்கு உள்ளது. இதற்கு முன்பு ஆக்சிஸ் வங்கியில் கணக்கு இருந்தா என்றால் 2 ஆண்டுகளுக்கு முன்பு மனு கொடுத்து கணக்கை முடித்துவிட்டேன். முருகேசன், சங்கர் என்பவர்களில் முருகேசன் கோயபுத்தூரில் வேலை செய்து வருகிறார். முகவரி தெரியாது. சங்கர் என்பவர் கடந்த 7 வருடங்களுக்கு முன்பாக சிங்கபூரில் வேலை செய்து வருகிறார். முருகேசன் மற்றும் சங்கர் இருவரும் காரைக்குடியை சேர்ந்தவர் இல்லை என்றால் சரிதான். சங்கரின் முகவரியும் எனக்கு தெரியாது. நான் முருகேசன் மற்றும் சங்கர் என்பவரிடன் எந்த கடன் தொகையும் வாங்கவில்லை என்பதால் அவர்களுடைய முகவரி எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

2) ஆக்சிஸ் வங்கியில் கணக்கு முடித்த சமயத்தில் எனது காசோலையை திரும்ப

செலுத்திவிட்டேன். என்னிடம் காசோலை உள்ள சமயத்தில் எதற்காக என் தம்பியின் காசோலையை பெற்று நான் கடன் பெற்றேன் என்றால் நான் வங்கியில் கடன் கேட்டதற்கு எனக்கு வரவு செலவு பத்தாது என்ற காரணத்தால் எனக்கு கடன் தர மறுத்துவிட்டனர். அதனால் நான் என் தம்பியின் காசோலையை வைத்து கடன் வாங்கினேன். என் தம்பி என்னிடம் கொடுத்த 5 கசோலைகளில், 3 காசோலைகளின் எண்கள் தெரியுமா என்றால் நினைவில்லை. என் தம்பி அவரது வங்கி கணக்கை 2013 ல் முடித்ததாக நான் சொல்லியுள்ள விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் என் தம்பி சொல்லிதான் தெரியும்.

3) நான் முருகேசன் மற்றும் சங்கர் என்பவர்களிடம் பெற்ற கடனை திருப்பி செலுத்தியதற்கு ஆதரவாக எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. 2024 ம் வருடம் பொங்கலுக்கு முன்பாக நான் கடையை சுத்தம் செய்யவில்லை என்றால் சரிதான். என் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள இரண்டு காசோலைகளை என் தம்பியிடம் திருப்பி செலுத்திவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அது தவறு. சாட்சியத்தில் உள்ள ஆவணங்களை என் தம்பி எப்போது திருப்பி கேட்டார் என்றால் 2013 ம் வருடம் திருப்பி கேட்டார். நான் சாட்சியத்தில் சொல்லியுள்ள படி என் தம்பி என்னிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் என் தம்பிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி புகார்தாரரிடம் கடன் பெற்றுக்கொண்டு அதில் இருந்து தப்பிப்பதற்காக என்னை பொய் சாட்சியம் சொல்ல சொல்லியிருக்கிறார் என்றால்

சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.01.08 18:14:51 +0530

நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், காரைக்குடி.( மு.கூ.பொ)